සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)**

# Open Competitive Examination for Recruitment to Class 3 Grade III of Information and Communication Technology Service - 2014 (2015)

## (i) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்துப் பரீட்சை

## ICT Written Test

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



* **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

I 2 3 4

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.**

......................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

- * இவ்வினாத்தாள் 11 பக்கங்களில் **75** வினாக்களைக் கொண்டுள்ளது.
- * விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.
- * **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
- * இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **இரண்டு மணித்தியாலங்கள்** ஆகும்.
- * மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
- * **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- * **கணிப்பான்களைப் பயன்படுத்த முடியாது.**
- * விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
- * **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- * இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
- * **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 10 | |
| 3 | 11 - 22 | |
| 4 | 23 - 31 | |
| 5 | 32 - 39 | |
| 6 | 40 - 47 | |
| 7 | 48 - 55 | |
| 8 | 56 - 61 | |
| 9 | 62 - 66 | |
| 10 | 67 - 72 | |
| 11 | 73 - 75 | |
| **மொத்தம்** | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

● **1** இலிருந்து **50** வரையான வினாக்களுக்கு **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்து அவ் **இலக்கத்தை** தரப்பட்ட **அடைப்பினுள்** எழுதுக.

1. பின்வருவனவற்றுள் கணினியின் முக்கியமான கூறு **அல்லாதது** எது?
   (1) Monitor (2) CPU (3) CD-ROM (4) Memory (.........)

2. பிரதான நினைவகத்தின்(main memory) சேமிப்பு கொள்ளளவை அதன் உண்மை கொள்ளளவிலும் கூடிய கொள்ளளவாகக் கூட்டுவதற்குரிய நுட்பமுறை எது?
   (1) multitasking (2) virtual storage (3) multiprocessing (4) switching (.........)

3. பின்வருவனவற்றுள் தரவுகளை உள்ளீடு செய்வதற்கும் வருவிளைவைப் பெறுவதற்கும் பயன்படுத்தப்படும் கருவி எது?
   (1) விசைப்பலகை (2) தொடுதிரை (3) வருடி(scanner) (4) சுட்டி (.........)

4. மென்பொருள் நிறுவுதலின்போது (install) தேவையான பகுதிகளை மட்டும் தெரிவு செய்வதற்கு அனுமதிக்கும் நிறுவுதல் விருப்பத்தேர்வு எது?
   (1) Typical (2) Portable (3) Full (4) Custom (.........)

5. "மென்பொருள் என்பது செய்ய வேண்டிய செயல்கள் எவையென ......................................... மூலம்..................... க்கு அறிவுறுத்தும்." இக்கூற்றின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சோடிச் சொற்கள் பின்வருவனவற்றுள் எது?
   (1) செய்நிரல், கருவி (2) குறிமுறை, வன்பொருள்
   (3) அறிவுறுத்தல், மையமுறைவழி அலகு (4) அறிவுறுத்தல் தொகுதி, வன்பொருள் (.........)

6. அச்சிடும் வரிசையில் (print queue) உள்ளடக்கப்படுவது.........................பட்டியலாகும்.
   (1) அச்சுப் பொறியினை அணுகும் அனுமதி பெற்ற அனைத்து பயனர்களினதும்
   (2) ஒரு நாளில் அலுவலகத்தில் பயன்படுத்திய அச்சுப் பொறிகளின்
   (3) அனைத்துப் பயனர்களாலும் இந்த அச்சுப் பொறியைப் பாவித்து அச்சிடவேண்டிய ஆவணங்களின்
   (4) ஒரே நாளில் இவ் அச்சுப் பொறி மூலம் அச்சிடப்பட்ட ஆவணங்களின் (.........)

7. தாய்ப்பலகையின் பற்றரி செயலிழந்துள்ளதைக் காட்டும் குறிகாட்டி பின்வருவனவற்றுள் எது?
   (1) பணிசெயல்முறைமையின் கடவுச்சொற்கள் ( system passwords) தொலைதல்.
   (2) வன்வட்டிலுள்ள கோவைகள் தொலைதல் அல்லது சீரழிதல்.
   (3) மாய நினைவகத்தை (virtual memory) அமைக்கும்போது இயல்புநிலை (default) பெறுமதிக்குத் திருப்புதல்.
   (4) தற்போதைய திகதியும் நேரமும் இயல்புநிலை பெறுமதிக்குத் திரும்புதல். (.........)

8. குவியம் (hub) ஐ விட ஆளி (switch) இலுள்ள நன்மை பின்வருவனவற்றுள் எது?
   (1) வலையமைப்பு நெரிசலைக் (network traffic) குறைக்கும்.
   (2) வைரஸ்களின் பரவுகையைத் தடுத்தல்.
   (3) இணையத்துடன் அதற்குரிய கணினியை நேரடியாகத் தொடுத்தல்.
   (4) பணிநிலையத்தில் (workstation) கடவுச்சொற்களின் பாதுகாப்பை முகாமை செய்தல். (.........)

9. பின்வரும் கூற்றுகளுள் 'வாசிப்பு மாத்திர நினைவகம் (Read Only Memory-ROM)' தொடர்பாக உண்மையானது எது?
   (1) பிரயோக செய்நிரல்கள் ROM இல் தரவுகளை எழுதும்.
   (2) கணினியை நிறுத்தும் போது (switched off) ROM இலுள்ள உள்ளடக்கங்கள் அழிக்கப்பட மாட்டாது.
   (3) இணையப்பக்கங்கள் பதிவிறக்கப்படும் போது (download) அவை ROM இல் சேமிக்கப்படும்.
   (4) கணினியை நிறுத்தும் போது ROM இலுள்ள உள்ளடக்கங்கள் அழிக்கப்படும். (.........)

10. Zip என்பது ............. கோவையாகும்.
    (1) செறிகோப்பு (compressed) (2) முறைமை (system)
    (3) செய்நிரல் (program) (4) நிறைவேற்றத்தகு (executable) (.........)

[பக் 3 ஐப் பார்க்க

11. pen drive, thumb drive, key drive அல்லது jump drive எனும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படும் .................. ஒரு கணினியிலிருந்து ஒளிப்படங்களை இன்னொரு கணினிக்குக் கொண்டு செல்வதற்குரிய சிறந்த வழியாகும்.
 (1) USB பளிச்சீட்டு வட்டு (2) வன்வட்டு
 (3) இறுவட்டு வாசிப்பு மாத்திர நினைவகம் (CD ROM) (4) இலக்க ஒளித்தோற்ற வட்டு (DVD) (.........)

12. இணையம் தொழிற்படுவது ...................... உடன்படு நெறிமுறையில் (protocol) மூலமாகும்.
 (1) http (2) ftp (3) tcp/ip (4) ip (.........)

13. http இன் விரிவாக்கம் ........................................................
 (1) hot text termination protocol. (2) high text transfer protocol.
 (3) hyper text transfer protocol. (4) high text termination protocol. (.........)

14. நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருளின் தொழிற்பாடு **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
 (1) இணையத்தினுள் பாதுகாப்பை உருவாக்கும்.
 (2) உள்வரும் கோவைகள் அனைத்தையும் வருடும் (scan).
 (3) உங்கள் கணினிக்கு வரும் நச்சு நிரல்களைத் தடுத்து நிறுத்தும்.
 (4) கோவைகளை வினைத்திறனுடன் பதிவிறக்கும். (.........)

15. Facebook என்பது ஒரு ...................................... வலையமைப்பாகும்.
 (1) தொடர்பாடல் (2) மென்பொருள் (3) ஊடக (4) சமூக (.........)

16. கூள் மின்னஞ்சல் (junk email) என்பது ஒரு ............................ஆகும்.
 (1) நச்சு நிரல் (2) spam (3) இணைப்பு(attachment) (4) திரைப்படம் (.........)

17. URL பற்றி உண்மையானது பின்வருவனவற்றுள் எது?
 (1) URL இன் விரிவாக்கம் ' Universal Resource Locator ' என்பதாகும்.
 (2) கோவையொன்றின் அடைவுப் பாதையைக் (directory path) குறிக்கும்.
 (3) IP முகவரியுடன் எந்தத் தொடர்பும் அற்றது.
 (4) URL ஐப் பாவித்து நாங்கள் இணையத் தளத்தில் பிரவேசிக்க முடியும். (.........)

18. பின்வருவனவற்றுள் உரையாடலுக்குப் (chatting) **பயன்படாதது** எது?
 (1) Google (2) Yahoo (3) Skype (4) Linux (.........)

19. பின்வருவனவற்றுள் 'WWW' தொடர்பாக **பிழையான** கூற்று எது ?
 (1) இணைய முகவரியொன்று WWW உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
 (2) மில்லியன் கணக்கான இணையப்பக்கங்களை கொண்டதாகும்.
 (3) WWW இணைய முகவரியின் எந்தவொரு இடத்திலும் காணப்படலாம்.
 (4) இது ஒலி, வீடியோ கோவைகளைக் கொண்டிருக்கும். (.........)

20. பின்வரும் எதில் மின்னஞ்சல் செய்தியில் பெறுநரின் மின்னஞ்சல் முகவரி தோன்றாதவாறு பிரதியொன்று பெறுநருக்கு அனுப்பப்படும்?
 (1) CC (2) To (3) BCC (4) Sender (.........)

21. முறைமை நிர்வாகியின் (system administrator) கணினியை அனுமதி பெறாத பயனர் ஒருவர் அணுகுவதால் ஏற்படக் கூடிய அதி பயங்கரமான பாதக விளைவாக அமையக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
 (1) காப்பு பூட்டுகளில் (backup logs) உள்ள தகவலை அணுகுதல்
 (2) அச்சுப் பொறிகளை அணுகும் அமைப்பை (access setting) மாற்றுதல்
 (3) பிரவேசத்திரையின் பின்னணியை மாற்றுதல்
 (4) முறைமை நிர்வாகியின் கடவுச்சொல்லை (password) மாற்றுதல் (.........)

22. MSWord ஆவணத்தில் உட்புகுத்த **முடியாதது** பின்வருவனவற்றுள் எது?
 (1) பிட்படல படிமம் (bitmap image) (2) மீஇணைப்பு (hyperlink)
 (3) தலைப்பு (header) (4) மின்னஞ்சல் செய்தி (.........)

[பக் 4 ஐப் பார்க்க